## ஏப்ரல் – 01 – திங்கள்

**தூய கியூக்**

**“இறையன்பரே ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள் ” – திபா 30:4**

**முதல் வாசகம் : ஏசாயா 65 : 17 – 21**

ஆண்டவர் கூறுவது இதுவே : இதோ! புதிய விண்ணுலகையும் புதிய மண்ணுலகையும் படைக்கிறேன் முந்தியவை நினைத்துப் பார்க்கப்படுவதில்லை மனத்தில் எழுதுவதுமில்லை. நான் படைப்பனவற்றில் நீங்கள் என்றென்றும் மகிழ்ந்து களிகூருங்கள். இதோ நான் எருசலேமை மகிழ்ச்சிக்குரியதாகவும் அதன் மக்களைப் பூரிப்பவர்களாகவும் படைக்கிறேன். நானும் எருசலேமை முன்னிட்டு மகிழ்ச்சியடைவேன் என் மக்களைக் குறித்துப் பூரிப்படைவேன் இனி அங்கே அழுகையும் கூக்குரலும் ஒருபோதும் கேட்கப்படா. இனி அங்கே நில நாள்களுக்குள் இறக்கும் பச்சிளங்குழந்தையே இராது. தம் வாழ்நாளை நிறைவு செய்யாத முதியவர் இரார். ஏனெனில், நூறாண்டு வாழ்ந்து இறப்பவனும் இளைஞனாகக் கருதப்படுவான். பாவியோ நூறு ஆண்டுகள் வாழ்ந்தும் சாபத்திற்கு உட்பட்டிருப்பான்.
அவர்கள் வீடு கட்டி அங்கு குடியிருப்பார்கள் திராட்சை நட்டு அதன் கனிகளை உண்பார்கள்.

**பதில்பாடல்:** ஆண்டவரே உம்மைப் புகழ்வேன். ஏனெனில், என்னைக் கைதூக்கி விட்டீர்

**நற்செய்தி : யோவான் 4 : 43 - 54**

அக்காலத்தில் இயேசு சமாரியாவிலிருந்து கலிலேயாவுக்குச் சென்றார். தம் சொந்த ஊரில் இறைவாக்கினருக்கு மதிப்பு இராது என்று அவரே கூறியிருந்தார். அவர் கலிலேயா வந்தபோது கலிலேயர் அவரை வரவேற்றனர். ஏனெனில் அவர்கள் திருவிழாவுக்குச் சென்றிருந்தபோது எருசலேமில் அவர் செய்தவை அனைத்தையும் கண்டிருந்தனர். கலிலேயாவில் உள்ள கானாவுக்கு இயேசு மீண்டும் சென்றார். அங்கே தான் அவர் தண்ணீரைத் திராட்சை இரசம் ஆக்கியிருந்தார். கப்பர்நாகுமில் அரச அலுவலரின் மகன் ஒருவன் நோயுற்றிருந்தான். இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்திருப்பதாகக் கேள்விப்பட்ட அரச அலுவலர் அவரிடம் சென்று, சாகும் தறுவாயிலிருந்த தம் மகனை நலமாக்க வருமாறு வேண்டினார். இயேசு அவரை நோக்கி, ”அடையாளங் களையும் அருஞ்செயல்களையும் கண்டாலன்றி நீங்கள் நம்பவே மாட்டீர்கள். ”என்றார். அரச அலுவலர் இயேசுவிடம், ”ஐயா, என் மகன் இறக்குமுன் வாரும்” என்றார். இயேசு அவரிடம், ”நீர் புறப்பட்டுப்போம். உம் மகன் பிழைத்துக் கொள்வான்” என்றார். அவரும் இயேசு தம்மிடம் சொன்ன வார்த்தையை நம்பிப் புறப்பட்டுப் போனார். அவர் போய்க் கொண்டிருக்கும் போதே அவருடைய பணியாளர்கள் அவருக்கு எதிர்கொண்டுவந்து மகன் பிழைத்துக் கொண்டான் என்று கூறினார்கள். ”எத்தனை மணிக்கு நோய் நீங்கியது?” என்று அவர் அவர்களிடம் வினவ, அவர்கள், ”நேற்றுப் பிற்பகல் ஒருமணிக்கு காய்ச்சல் நீங்கியது” என்றார்கள். ”உம் மகன் பிழைத்துக் கொள்வான்” என்று இயேசு அந்நேரத்தில்தான் கூறினார் என்பதை அவன் தந்தை நினைவுகூர்ந்தார். அவரும் அவர் வீட்டார் அனைவரும் இயேசுவை நம்பினர்.இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்தபிறகு செய்த இரண்டாவது அரும் அடையாளம் இதுவே.

**தியானம் :** இன்னமும் 14 நாட்களில் பரிசுத்த வாரத்துக்குள் காலடி பதிக்கும் நாம் எமது பிள்ளைகள் சுகவீனமுற்றால் பெற்றோர் கவலைப்படுவது போன்ற சம்பவத்தை இன்றைய நற்செய்தியில் (யோவான் 4:43-54) அவதானிக்கின்றோம். ஆயினும், ஆண்டவர் இயேசு மனுவுருவெடுத்தது எமது உடல் நோய்களை மாத்திரம் தீர்ப்பதற்கல்ல மாறாக, ஆன்ம நோய்களைத் தீர்ப்பதற்காகவும் என்பதனை நற்செய்தியில் தமது வாய்ச் சொல்லின் வல்லமையான அடையாளத்தின் வழியாக ஆண்டவர் இயேசு எமக்கு வேறுவிதமாகப் போதிக்கின்றார். ஆண்டவர் இயேசுவின் வல்லமையில் நம்பிக்கை வைத்தவர்கள் கூரையைப் பிரித்து நோயாளிகளை இறக்கி, மற்றும் அவரது ஆடையின் விளிம்பை மட்டும் தொட்டு மட்டுமல்ல, ஒருவார்த்தை மட்டும் சொன்னால் போதும் என்றும் குணம் பெறவைத்துள்ளனர். இன்றைய நற்செய்தியில் ஒருபுதுவிதக் குணமாக்கலின் அடையாளத்தை நாம் அவதானிக்கிறோம். தமது சொந்த ஊரான கலிலேயாவில் இறைவாக்கினருக்கு மதிப்பிராது (யோவான் 4:44) என்று தெரிவித்த ஆண்டவர் இயேசு, தம்மிடமிருந்து புறப்படுகின்ற வல்லமையின் அடையாளங்களை புரிந்துகொள்ள கலிலேய மக்களை மாத்திரம் அழைக்கவில்லை. மாறாக, எமது பரிசேய, சதுசேய குணங்களைத் திருத்தி வாழவும் அழைக்கின்றார். அன்றைய கலிலேயர் தமது சொந்த ஊரவரான இயேசுவின் பாடுகளையும், மரணத்தையும், உத்தானத்தையும் காணுமுன்னர் முரண்பாடாக நடந்திருக்கலாம்? ஆயினும், எமது பாவங்களுக்காக தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்து எம்மை மீட்டெடுத்தவரை எவ்வாறு ஏற்றுக் கொள்கின்றோம்? என்பதனைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்காகவும் தவக்காலம் தரப்பட்டுள்ளது. தமது வல்லமையான செயல்கள் - அடையாளங்கள் மூலமாகத் தான் யார் என்பதனை வெளிப்படுத்திய ஆண்டவர் இயேசுவை நாம் எமது இரட்சகரென ஏற்கிறோமா? அல்லது கலிலேய மக்களது பரிசேய, சதுசேய அடிச்சுவட்டைப் பின்பற்றுகின்றோமா? ஆண்டவர் இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவோமாயின் இன்றே மனம்வருந்தி பாவப்பொறுத்தல் அருட்சாதனத்தைப் பெற்று ஒப்புரவாகுவோம்.